# <u>கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பாடசாலை ரீதியாக இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2016 (சிங்களம் / தமிழ் மொழி மூலம்)</u>

கிழக்கு மாகாணத்தின் கஷ்டப்பிரதேசங்களில் காணப்படும் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பாடசாலை ரீதியாக இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2016.08.24 ஆகும்.

## 01. தகைமைகள் :

### 1.1 பொதுத் தகைமைகள் :

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. 2016.08.24 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது ஒரு (01) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல்.

அல்லது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது மூன்று வருடங்களாவது (03) தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்துவரும் ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து இம் மாகாணத்திற்கு வந்த ஒருவர் அது சம்பந்தமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:** பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்

### 1.2 கல்வித் தகைமைகள் :

I. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக 2016.08.24 ஆந் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பிக்கும் பாடத்திற்கமைவான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

II. கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் க.பொ.த (சா/த) பரீட்சையிலும், க.பொ.த (உ/த) பரீட்சையிலும் கீழ்க் குறிப்பிட்டவாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்

- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 03 திறமைச் சித்திகளுடன் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

  அத்துடன்

- புதிய பாடத்திட்டத்திற்கமைய க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு** : பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேசிய க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சை மற்றும் அவற்றிற்கு சமமான அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தி அடைந்தோரும் விண்ணப்பிக்க முடியும்.

## 02. ஆட்சேர்ப்பு முறையும் சேவை நிபந்தனைகளும் :

2.1 தற்போது இலங்கை ஆசிரியர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.2 இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்காக பிரயோகப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூல போட்டிப்பரீட்சை மற்றும் பிரயோகப்பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கிற்கு அமைவாக வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலை மற்றும் பாடங்கள் அடிப்படையில் நியமனங்களை

வழங்குவதற்கு நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியானோர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படுவர். (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)

குறிப்பு :

**விண்ணப்பிக்கும் பாடத்திற்கு இயைபுடைய வெற்றிட எண்ணிக்கை மற்றும் எழுத்துப்பரீட்சை மற்றும் பிரயோகப்பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் பாடசாலை ரீதியான முறைமைக்கு அமைவாக ஒரு பாடசாலைக்கு விண்ணப்பித்த பலரின் புள்ளிகள் சமமாக இருக்குமிடத்து, பாடசாலைக்கு அண்மித்த தூர அளவுக்கு அமைவாக முன்னுரிமை வழங்கப்படும். அந்த நிர்ணயத்தின் அடிப்படையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.**

2.3 ஏதேனும் ஒரு பாடசாலைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் எவரும் எழுத்து மூலப்பரீட்சையில் சித்தியடையாத சந்தர்ப்பத்தில் வேறு பாடசாலைகளுக்கு விண்ணப்பித்து, எழுத்து மூலப்பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் சித்தியடைந்தோரில் பாடசாலைகள் ஏதேனும் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகளிலிருந்து குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய அச்செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

2.4 வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் பாடங்களும் பின்வருமாறு.

| பாட இலக்கம் | மொழி மூலம் | பாடம் | மாவட்டங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை |
| 01 | சிங்களம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) | ✓ | ---- | ---- |
| | தமிழ் | | ✓ | ✓ | ✓ |
| 02 | சிங்களம் | ஆரம்பக்கல்வி | ✓ | ---- | ---- |
| 03 | சிங்களம் | சித்திரம் | ✓ | ---- | ---- |
| 04 | சிங்களம் | சங்கீதம் | ✓ | ---- | ---- |
| 05 | சிங்களம் | நடனம் | ✓ | ---- | ---- |
| 06 | சிங்களம் | நாடகமும் அரங்கியலும் | ✓ | ---- | ---- |
| 07 | சிங்களம் | பௌத்த நாகரிகம் | ✓ | ---- | ---- |
| 08 | சிங்களம் | விவசாயம் | ✓ | ---- | ---- |
| 09 | சிங்களம் | சிங்கள மொழி | ✓ | ---- | ---- |
| 10 | சிங்களம் | உடற்கல்வி | ✓ | ---- | ---- |
| 11 | தமிழ் | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் | ✓ | ✓ | ✓ |
| 12 | தமிழ் | இரண்டாம் மொழி (சிங்களம்) | ✓ | ✓ | ✓ |
| 13 | தமிழ் | தமிழ்மொழி | ✓ | ✓ | ✓ |

**("✓" எனும் குறியீடு வெற்றிடத்தையும், "----" எனும் குறியீடு வெற்றிடமின்மையையும் குறிக்கும்)**

2.5 விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பிக்கப்படும் பாடம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது. அதே போன்று அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன் முறையீடுகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.6 ஒவ்வொரு பாடங்களுக்காகவும் காணப்படும் வெற்றிடங்களைவிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பின், எழுத்து மூல போட்டிப்பரீட்சை நடாத்தப்படமாட்டாது. எனினும், விண்ணப்பதாரிகள் பிரயோகப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

2.7 பாடசாலை அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதனால் 10 ஆண்டுகள் முடிவடையும் வரை எவ்வகையிலும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்று செய்து கொள்வது அவசியம் என நியமன அதிகாரி அல்லது நிர்வாக அதிகாரி தீர்மானிப்பின் அதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.8 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 25.02.2016 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 3/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 27,740 – 300 x 6 – 380 x 7 – 445 x 2 – ரூபா. 33,090/- ஆகும். இச்சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆவது படிநிலையில் பட்டதாரிகள் அமர்த்தப்படுவர்.

2.9 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்டபுடையதாகும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.3 அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்காக காணப்படும் வெற்றிடங்களுக்கமைவாக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்களை தனித்தனியாக உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி வேறு வேறான கடித உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பாடங்களுக்காகவும் விண்ணப்பிக்கும்போது தனித்தனியாக விண்ணப்பிக்காது ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தாலோ, பற்றுச்சீட்டை தனித்தனியாக உரிய இடத்தில் ஒட்டப்பட்டிருக்காவிட்டாலோ அவ்விண்ணப்பப்படிவம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விண்ணப்பிக்கும் பாடசாலைகள் மூன்றினை அவற்றிற்கு ஏற்புடைய தொடரிலக்கத்தை விருப்பத்தெரிவுக்கு அமைவாகவும் உள்ளீடு செய்க. இது பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது.

3.4. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 240,360/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2016 ஒகஸ்ட் மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

3.6. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/16/09** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

3.7 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தற்போது அரச/கிழக்கு மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின், தேவையான தகைமைகளையுடையவர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களை தமது திணைக்களத்தலைவருடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், திணைக்களத் தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத, அனுமதிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது முதல் நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**04. பரீட்சைக்கான அனுமதி :**

4.1 விண்ணப்பங்களை அனுப்பி வைத்த அடிப்படைத் தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4.2 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டையின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி முதலாவது அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

குறிப்பு : **பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது.**

**05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**07. பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

இப்பரீட்சை சிங்கள, தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். அதில் சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணபித்தோர் சிங்கள மொழி மூலமும், தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணபித்தோர் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**08. பாடத்திட்டம் :**

**8.1 எழுத்துப்பரீட்சை :**

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இரண்டாகும். இந்த இரண்டு வினாப்பத்திரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்ததாகக் காணப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**01.** உளச்சார்பு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆசிரியத் தொழிலுக்கான திறமையினையும் தர்க்க ரீதியான சிந்தனை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**02.** பொது அறிவு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரியத்துறைக்கு இயைபுடைய அந்தத்துறை தொடர்பான பொது அறிவு அத்துடன் / அல்லது தேசிய ரீதியில் இடம்பெற்ற மற்றும் இடம் பெறுகின்ற கல்வியின் போக்கு சம்பந்தமான பொது அறிவு மற்றும்

கல்வியினை நவீனமயமாக்கல் சம்பந்தமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**8.2 பிரயோகப்பரீட்சை :**

எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

**09. பரீட்சைக்கட்டணம் :**

9.1 பரீட்சைக்கட்டணம் ரூபா. 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணபத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

9.2 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.ep.gov.lk என்ற கிழக்கு மாகாண இணையதளத்தில் வெளியிடப்படும்.

10. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

11. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

12. நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத சான்றிதழ்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

13. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும், ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பிலும், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும், பட்டமொன்றின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பிலும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய அச்செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

14. விண்ணப்பப்படிவம் நிரப்பும்போது பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட விடயங்களையே கருத்தில் கொள்க.

அட்டவணை 01

| பாட இலக்கம் | மொழி மூலம் | பாடம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | சிங்களம் / தமிழ் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) | **முன்னுரிமை பின்வருமாறு அமைந்திருக்கும்**<br>i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம்<br>அல்லது<br>ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம்<br>அல்லது<br>iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்ப பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம். (செமஸ்டர்களில் (Semester) தகவல் தொழில்நுட்ப பாடம் மேலதிக/விருப்பத்திற்குரிய பாடமாக கற்றிருப்பின், அப்பாடங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது) |
| 02 | சிங்களம் | ஆரம்பக்கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கலைமானிப்பட்டம் |
| 03 | சிங்களம் | சித்திரம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சித்திர பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது சித்திரபாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 04 | சிங்களம் | சங்கீதம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சங்கீத பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது சங்கீதபாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 05 | சிங்களம் | நடனம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட நடன பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது நடனபாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 06 | சிங்களம் | நாடகமும் அரங்கியலும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட நாடகமும் அரங்கியலும்பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது நாடகமும் அரங்கியலும் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 07 | சிங்களம் | பௌத்த நாகரிகம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பௌத்த நாகரிகம் / பௌத்த சமயம் பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது பௌத்த நாகரிகம் / பௌத்த சமயம் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 08 | சிங்களம் | விவசாயம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட விவசாய பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது விவசாய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 09 | சிங்களம் | சிங்கள மொழி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சிங்கள மொழி பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது சிங்கள மொழி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | சிங்களம் | உடற்கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட உடற்கல்வி பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது உடற்கல்வி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 11 | தமிழ் | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / புவியியல் / சமூகவியல் பாடங்களில் ஒன்றைக்கொண்ட விசேட பட்டம் அல்லது மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஒன்றை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 12 | தமிழ் | இரண்டாம் மொழி (சிங்களம்) | **முன்னுரிமை பின்வருமாறு அமைந்திருக்கும்**<br>i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழியை பிரதான பாடமாக கொண்ட பட்டம் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்)<br>அல்லது<br>ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழி மூலமாக பெற்றுக்கொண்ட பட்டம் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்)<br>அல்லது<br>iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கலைமானிப் பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் திறமைச் சித்தியை அல்லது அதற்கு மேலான சித்தியை பெற்றிருத்தல் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்) |
| 13 | தமிழ் | தமிழ்மொழி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தமிழ்மொழி பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது தமிழ்மொழி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |

**<u>அட்டவணை 02 – வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளின் விபரங்கள்</u>**

| இல | மொழிமூலம் | இணைப்பு |
|---|---|---|
| 1 | சிங்களம் (Sinhala) | இணைப்பு 1 (Annexure 01) |
| 2 | தமிழ் (Tamil) | இணைப்பு 2 (Annexure 02) |

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**EX/Rec/16/09**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பாடசாலை ரீதியாக இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2016 (சிங்களம் / தமிழ் மொழி மூலம்)**

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(10 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.) ☐

**நிரந்தர வதிவிட மாவட்டம் : ………………………………………………………………………**

விண்ணப்பிக்கும் பாடம் : (அட்டவணை 01 இற்கு அமைவாக குறிப்பிடவும்)

| பாடம் | பாடத்திற்கான இலக்கம் |
|---|---|
| | |

விண்ணப்பிக்கும் பாடசாலையின் இலக்கங்கள் :

| (i) | (ii) | (iii) |
|---|---|---|
| | | |

(அட்டவணை 02 இற்கு அமைவாக குறிப்பிடவும்)

---

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Rev./Mr./Mrs./Miss./ ……………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA, A.B.C) ……………………………………………………………………

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ……………………………………………………………………

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………

2.0. 2.1. நிரந்தர முகவரி : ……………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ……………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ……………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இலக்கம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2016.08.24 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ வேறு ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் : …………………… II. பரீட்சை சுட்டிலக்கம் : ……………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் : …………………… II. பரீட்சை சுட்டிலக்கம் : ……………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3 உயர் கல்வித்தகைமைகள் பற்றிய விபரம் :

5.3.1 பட்டம் : ...........................................................................................................................................
5.3.2 பல்கலைக்கழகத்தின் / நிறுவனத்தின் பெயர் : ..................................................................................
5.3.3 பட்டம் பெற்ற திகதி : ..............................................................................................................
5.3.4 பட்டத்தின் பிராதான பாடம் / பாடங்கள் : .........................................................................................

6.0 அரச / மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,

6.1 திணைக்களம் / அலுவலகம் : ...................................................................................................
6.2 தற்போதைய பதவி : ..............................................................................................................
6.3 இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ....................................................................................
6.4 முதல் நியமனத் திகதி : ..........................................................................................................

7.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ……………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………........

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை / காசுக்கட்டளையினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள்

| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

**9.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.
(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.
(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………
திகதி : ……………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்

**10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 3.4 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
திகதி : ……………………….. கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
பெயர் : …………………………….
பதவி : ……………………………………………………………….
முகவரி : …………………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**11.0 திணைக்களத் தலைவரின் உறுதியுரை :**

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …............................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரின் சேவைக்காலத்தில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் அவர் மேல் இல்லையென்றும், சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் அவரின் சுயவிபரக்கோவையின்படி சரியெனவும், அவர் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………
திகதி : ……………………….. திணைக்களத்தலைவரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் : …………………………….
பதவி : ……………………………………………………………….
முகவரி : …………………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)